## பத்திரிகைச் செய்தி

**புதிய மின் இணைப்பு வழங்க ரூ.2,000/- லஞ்சம் வாங்கிய மின்வாரிய வணிக ஆய்வாளர் கைது**

திருவள்ளூர் மாவட்டம், கேசவராஜகுப்பம் கிராமம், பள்ளிப்பட்டு தாலுக்கா சேர்ந்த புகார்தாரர் திரு.பிரகாஷ், சுமார் 4 3/4 சென்ட் காலி இடத்தில் அரசு வீடு கட்டும் திட்டத்தின் கீழ் தளம் போட்டு கட்டிய புதிய வீட்டிற்கு தனியாக புதிய மின்சார சர்வீஸ் கேட்டு, கடந்த 24.02.2023-ந்தேதி இ-சேவை மையத்தில் சம்மந்தப்பட்ட ஆவணங்களை இணைத்து மனு பதிவு செய்தும். அதற்கு புதிய மின்னிணைப்பு சம்மந்தமாக கடந்த 01.03.2023-ந்தேதி பொதட்டூர்பேட்டை மின்சாரத்துறை அலுவலகத்திற்கு சென்று புதிய மின்னிணைப்பு குறித்து அங்கு இருந்த திரு.கணபதி, வணிக ஆய்வாளர் அவர்களை, அவரது அலுவலகத்தில் பார்த்து, மனுவை பற்றி கேட்டபோது. அவர் அதனை கம்ப்யூட்டரில் செக்கப்பண்ணிவிட்டு, பின் மனுதாரர் வீட்டிற்கு சென்று ஆய்வு செய்து சென்றவர் பின்னர் எந்த தகவலும் சொல்லாததால், கடந்த 06.03.2023-ந்தேதி காலை சுமார் 11.30 மணிக்கு பொதட்டூர்பேட்டை மின்சார வாரிய அலுவலகத்திற்கு சென்று திரு.கணபதி, வணிக ஆய்வாளர் அவர்களை பார்த்து, புதிய மின்னிணைப்பு சம்மந்தமாக கேட்டபோது திரு.கணபதி அவர்கள், வீட்டிற்கு தனி மீட்டர் மற்றும் புது மின்னிணைப்பு வேண்டும் என்றால், ரூ.5,086/- பணம் அரசு கட்டணமாகவும், அவருக்கு தனியாக லஞ்சமாக ரூ.2,000/-ம் கொடுக்க வேண்டும் என்றும், அப்படி கொடுத்தால்தான் புதிய மின்னிணைப்பு சர்வீஸ் கொடுக்க ஏற்பாடு செய்வேன் என்றும் தெரிவித்தார். பின்னர் 14.03.2023-ந்தேதி அரசு கட்டணம் ரூ.5,086/-ஐ செலுத்திய பிறகும் மனுதாரர் வீட்டிற்கு மின்னிணைப்பு கொடுக்கவில்லை. அதன்பின், இன்று 23.03.2023-ந்தேதி திரு.கணபதி, வணிக ஆய்வாளர் அவர்களுக்கு செல்போனில் தொடர்பு கொண்டு, அரசிற்கு செலுத்த வேண்டிய பணத்தை செலுத்திவிட்டேன் என்றும், ஆனால் இன்னும் புதிய மின்னிணைப்பு தரவில்லை என்று கேட்டதற்க்கு அதற்கு வணிக ஆய்வாளர் திரு.கணபதி அவர்கள் தான் ஏற்கெனவே கேட்ட பணம் ரூ.2,000/-ம் தரவேண்டும் என்று வற்புறுத்தியதின் பேரில் புகார்தாரர் 23.03.2023 அன்று திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு அலுவலகத்தை அணுகி அளித்த புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்து இன்று 24.03.2023-ஆம் தேதி மேற்படி தொகை ரூ.2,000/-ஐ புகார்தாரரிடம் லஞ்சமாக கேட்டு பெற்றுக்கொண்ட போது திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட பொறி வைப்பு நடவடிக்கையில் கைது செய்யப்பட்டு சிறைக்காவல் செய்ய வேண்டி முதன்மை குற்றவியல் நடுவர், திருவள்ளூர் அவர்கள் முன் ஆஜர் செய்யப்பட்டார். மேலும் திரு.கணபதி, வணிக ஆய்வாளர் அவரிடம் சோதனை செய்ததில் கணக்கில் காட்டப்படாத ரொக்கம் ரூ.25,610/- கைப்பற்றப்பட்டது

# PRESS NOTE

## TNEB COMMERCIAL INSPECTOR ARRESTED FOR DEMAND AND OBTAINMENT OF BRIBE Rs.2,000/- FOR ISSUING NEW EB CONNECTION

The complainant Tr.Prakash, is residing at Kesavarajakuppam Village, Pallipattu Taluk, Thiruvallur District. The complainant had applied for new EB connection for his 4¾ cent land under Government constructing house scheme at E-sevai centre on 24.02.2023. On 01.03.2023 the Complainant went to Pothatturpet EB office and met Tr.Ganapathy, Commercial Inspector, TANGEDCO asked about petition status, then complainant return to home and checked computer about petition status, but petition progress not updated. On 06.03.2023 complainant again met Tr.Ganapathy, Commercial Inspector, who directed the complainant to pay Rs.5,086 for government fees and demanded Rs.2,000/- as bribe for processing his application. Later on 14.03.2023 complainant paid the Rs.5,086/- for government fees. Tr.Ganapathy, Commercial Inspector did not issue EB connection even after paying the government fees by the complainant. On 23.03.2023 the complainant contacted Tr.Ganapathy, Commercial Inspector over phone, Tr.Ganapathy compelled the complainant to pay bribe amount of Rs.2,000/-. The Complainant not willing to give bribe, approached the Vigilance and Anti-Corruption, Thiruvallur detachment and gave complaint. In this connection a case was registered and a trap was organized. Today 24.03.2023, during the trap proceedings, the complainant gave the bribe amount of Rs.2,000/- to Tr.Ganapathy, Commercial Inspector. . Moreover, an unaccounted money of Rs.25,610/- recovered from Tr.Ganapathy. The accused was arrested and sent to judicial custody